# பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு

## 2026 ஆம் ஆண்டிற்கான வழங்குனர்கள் / ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல்

1. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களுக்காக 2026 ஆம் ஆண்டிற்கான வழங்குனர் / ஒப்பந்ததாராக பதிவு செய்துக்கொள்வதற்காக கட்டுமானம், பழுதுபார்ப்பு, பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வெளிநாட்டு உற்பத்தியாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள், உள்ளூர் உற்பத்தியாளர்கள், உள்ளூர் வழங்குனர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஆலோசனை நிறுவனங்கள் சார்பாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள அமைச்சின் செயலாளரினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. உங்கள் பதிவுகள் பின்வரும் நிறுவனங்களுக்கு செல்லுபடியாகும்

- பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு
- இலங்கை பொலிஸ்
- பொலிஸ் சிறப்பு அதிரடிப்படை
- குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்
- தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை
- சிவில் பாதுகாப்புத் திணைக்களம்
- புனர்வாழ்வுப் பணியகம்

3. விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளும் முறை

அ. விண்ணப்பங்களை **2025.11.12** முதல் **2025.12.12** ஆம் திகதி வரை பின்வரும் இணையதளங்களில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். **www.police.lk/www.immigration.gov.lk**

ஆ. பதிவு செய்வதற்கான விண்ணப்ப தொகுப்பு பின்வரும் பகுதிகளைக் கொண்டுள்ளது.

- பிரதான விண்ணப்பம்.
- வெளிநாட்டு வழங்கல் நிறுவனத்தின் விண்ணப்பப்படிவம்
- அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய படிவம்.
- விபரங்களின் பட்டியல்.

4. வகுதி ஒன்றிற்காக அறவிடப்படும் கட்டணம்

அ. உள்ளூர் வழங்குனர்களிடமிருந்து வகுதி ஒன்றிற்காக அறவிடப்படும் கட்டணம் **இலங்கை ரூபாய் ஆயிரத்து தொல்லாயிரம் LKR**.1,900.00 ஆகும்.

ஆ. வெளிநாட்டு வழங்குனர்களிடமிருந்து ஒரு தொகுதிக்காக வசூலிக்கப்படும் கட்டணம் **(USD 10) அ.மெ.டொலர்.**

இ. உள்ளூர் முகவர்கள் மூலம் பணம் செலுத்தும்போது ஒரு வகுதிக்காக அறவிடப்படும் கட்டணம் **இலங்கை ரூபாய் மூவாயிரத்து எண்ணூறு (ரூ.3,800.00)** ஆகும்.

ஈ. பொதுப் பாதுகாப்பு அமைச்சின் அலுவலகத்தில் வகுதிக் கட்டணம் பணமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது, 2026 ஆம் ஆண்டிற்கான வழங்குனர்களைப் பதிவுசெய்வதற்கான வகுதிக் கட்டணத்தை செயலாளர், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு, இலங்கை வங்கி, பத்தரமுல்ல கிளையில் 7040131 எனும் வங்கிக் கணக்கிலக்கத்தில் இலங்கை வங்கியின் எந்தக் கிளையிலும் வைப்புச் செய்யலாம்.

உ. வெளிநாட்டு வழங்குனர்களுக்கான வகுதிக் கட்டணத்தை தூதரகங்கள் மூலம் செலுத்துவது நிறுத்தப்பட்டுள்ளதால், பின்வரும் Swift code கட்டண முறைகளைப் பயன்படுத்தி இலங்கை வங்கிக்கு பணம் செலுத்த வேண்டும்.

| | |
|---|---|
| **Swift இலக்கம்** | **- BCEYLKLX** |
| **வங்கி இலக்கம்** | **- 7010** |
| **கிளை இலக்கம்** | **- 679** |
| **கணக்கு இலக்கம்** | **- 7040131** |

ஊ. வகுதிக் கட்டணத்தைச் செலுத்தும் போது விண்ணப்பப் படிவத்துடன் பணம் வைப்புச் சீட்டினை இணைத்து சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும்.

எ. உள்ளூர் வழங்குனர்கள் மற்றும் வெளிநாட்டு வழங்குனர்கள் **2025.11.12** முதல் **2025.12.12** வரையிலான காலப்பகுதியில் வகுதிக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும் மேலும் **2025.12.12** ஆம் திகதிக்குப் பிறகு செலுத்தப்படும் வகுதிக் கட்டணங்களுக்குப் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சினால் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

5. பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்கள் / ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோருவது வழக்கமான நடைமுறையாக இருந்தாலும், போட்டி முறையிலான விலைமனுக்களை பெறுவதற்காக வெளிவாரி வழங்குனர்கள் / ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கோரலுக்கான உரிமையை அமைச்சு கொண்டுள்ளது.

6. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், உரிய ஆவணங்களுடன் **2025.12.12** ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் தலைமைக் கணக்காளருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் உள்ளடங்கிய உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"2026 ஆம் ஆண்டிற்கான உள்நாட்டு/ வெளிநாட்டு வழங்குனர்களை பதிவு செய்தல்"** எனக் குறிப்பிட வேண்டும்.

தலைமைக் கணக்காளர்,
பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு,
17 ஆம் மாடி,
"சுஹுருபாய"
பத்தரமுல்ல.

7. 2026 ஆம் ஆண்டிற்கான வழங்குனர்களை பதிவு செய்வது தொடர்பாக இறுதி முடிவுகளை எடுக்கும் உரிமை பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு உண்டு.

செயலாளர்,
பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு
18வது மாடி, "சுஹுருபாய", பத்தரமுல்ல, இலங்கை.
2025.11.12

SELACINE